# உதயன்

விலை ரூபா 6-00

மலர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை (02-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 292


# பெரியமடுப் பகுதியில் மோதல்கள் நீடிப்பு!

## அம்பகாமம் முனையில் நேற்றுச் சண்டை ஓய்வு

வவுனியா, நவம்பர் 2

வன்னியில் பெரியமடுப் பகுதியில் இருந்து முன்னேற முயலும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த இரு தினங்களாகக் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதல்களில் இரு தரப்பிலும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பெரியமடுவில் முன்னணிக் காவலரண்களில் இருந்து முன்னேறிச் செல்லும் படையினரை புலிகள் கடுமையாக எதிர்த்து வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரியமடுப் பகுதி மோதல்களில் புலிகளுக்கு பலத்த

[9 ஆம் பக்கம் பார்க்க]

## ஏறாவூரில் இளைஞன் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, நவ. 2

மட்டக்களப்பு — ஏறாவூர் பகுதியில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட இளைஞர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் எனவும் — அவரிடம் இருந்து கிரனேட் ஒன்றை மீட்டதாகவும் ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

அவரது சடலம் சீருடையுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-21)

## கருவேலங்கண்டல் பகுதியில் ஷெல்லுக்கு குடும்பஸ்தர் பலி!

வவுனியா, நவ. 2

அம்பகாமம் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு முதல் படையினர் ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள புளியங்குளம், கருவேலங்கண்டல் ஆகிய கிராமப் பகுதிகள் மீது தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று கருவேலங்கண்டல் பகுதியில் உள்ள வீடொன்றினுள் வீழ்ந்து வெடித்ததில் அந்த வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். அவரது மனைவி படுகாயமடைந்தார்.

சுப்பிரமணியம் தியாகராஜா (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார். அவரது மனைவியான தியாகராஜா கண்ணம்மா (வயது 50) என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவார்.

இச் சம்பவத்தில் கால்நடைகள் சிலவும் பலியாகின.

(ஐ-7-4)

## அம்பகாமம் பகுதியில் உயிரிழந்த மேலும் 24 புலிகளின் விவரம்

வவுனியா, நவ. 2

கடந்த ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை அம்பகாமம் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதல்களின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் 24 பேரின் பெயர் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

அவர்களின் விவரம் வருமாறு:

★ இரண்டாம் லெப்டினன்ட் அமுதவல்லி [வெள்ளைச்சாமி அம்மணி - யாழ்ப்பாணம்]

★ லெப்டினன்ட் அன்புவிழி [யோகராசா யோகேஸ்வரி - யாழ்ப்பாணம்]

★ கௌசலா [முருகேசு கோமளா - திருமலை]

★ பிரியா அல்லது மேனகா [நல்லதம்பி நகுலேஸ்வரி - இரணையிலுப்பைக்குளம்]

[9 ஆம் பக்கம் பார்க்க]

# கடந்த இரு தினங்களாக கடும் விமானக்குண்டுவீச்சு!

## சேத விவரங்கள் தெரியவரவில்லை

வவுனியா, நவ. 2

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நேற்றும் நேற்று முன்தினமும் கடும் விமானக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கிபிர் விமானங்களும் எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல்களில் ஈடுபட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரிய மடுப் பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியிலும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் —

அவற்றால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை என்றும் —

சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னியில் அடையாளம் காணப்பட்ட புலிகளின் நிலைகளை விமானப் படையினர் குண்டு வீசி அழித்துள்ளதாகவும் —

இதன்போது உழவு இயந்திரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த புலிகளின் மோட்டார் ஷெல் ஒன்றை வெற்றிகரமாகத் தாக்கி அழித்துவிட்டதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஐ-7-4]

## விமானங்களில் இருந்து ஏவுகணை எதிர்ப்பு தாக்குதல்

வவுனியா, நவ. 2

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல்களின் போது விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் ஏவுகணை எதிர்ப்புத் தாக்குதல்களை முதல் முறையாக மேற்கொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

தரையில் இருந்து ஏவப்படும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைத் திருப்பித் தாக்கி அழிக்கவல்ல ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகள் செலுத்தப்பட்டதாகவும் —

ஆனால் புலிகள் தரையில் இருந்து விமானங்களை நோக்கி ஏவுகணைகளைச் செலுத்தினரா என்பது உறுதியாகத் தெரியவரவில்லை என்றும் —

மற்றொரு தகவல் தெரிவித்தது. [ஐ-7-21]

## தேர்தலை முன்னிட்டு வவுனியா நகரப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிப்பு

வவுனியா, நவ. 2

வவுனியா நகரப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் இரண்டுமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலீஸ் பகுதிக்கான புதிய பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஆர். எம். எல். டபிள்யூ ரட்னாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா பொலீஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதனால் வவுனியாப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

தேர்தல் காலத்தில் முறைகேடான நடவடிக்கைகளில் எவர் ஈடுபட்டாலும் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் —

அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

வவுனியா நகரப் பகுதியில் படையினரின் சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஐ-7-164-21)

# மன்னார் அரச அதிபரை விடுவித்து உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

கொழும்பு, நவ. 2

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டுக் கடந்த 57 தினங்களாக கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மன்னார் அரச அதிபர் எஸ். எம். குரூஸ் உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

வாசஸ் தலத்தில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்து கடந்த செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி அரச அதிபர் குரூஸ் கைது செய்யப்பட்டிருந்தார்.

காரணம் இன்றித் தம்மைக் கைது செய்து நியாயமற்ற முறையில் தடுத்து வைத்திருப்பது சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து தம்மை விடுவிக்கக் கோரி அவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அம் மனு மீதான விசாரணை நேற்று உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் பிரியந்த பெரேரா, எல். ஆர். வீரசேகர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மனுதாரரை தடுத்து வைப்பதற்கு காரணமான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத நிலையில் மனுவை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டது.

[ஐ-7-21]

## யாழ். நகரில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ். நகரின் பல பகுதிகளிலும் படையினர் நேற்று முழு நாளும் திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டதைக் காணமுடிந்தது.

சைக்கிள்களில் வந்த படையினர் நகரின் முக்கிய சந்திகளில் இறங்கி வீதிகளில் சென்றோர் மற்றும் வாகனங்களில் பயணம் செய்த அனைவரையும் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர். [ஐ-7-139]

## கைதிகள் போராட்டம் தொடர்கிறது

யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் புளொட் அமைப்பைச் சேர்ந்த நான்கு கைதிகளும் நேற்று இரண்டாவது நாளாகக் கூரை மீது ஏறியிருந்து தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

'பிணையில் விடுதலை செய் அல்லது விசாரணை செய்' என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று முன்தினம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## செம்மணி விவகாரம்: ஈ. பி. டி. பியின் அறிவிப்புக்கு பாதுகாவலர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 2

செம்மணிப் புதைகுழி அகழ்வின் போது அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூடுகளுக்கு உரியவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதாக ஈ. பி. டி. பி. அமைப்பினர் விடுத்த அறிவிப்பை கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் அறிக்கை ஒன்றை

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2000

மேற்படி தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

★ புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு இடம் பெறும்.

விண்ணப்ப முடிவு திகதி: 19 - 11 - 99

- அதிபர்
யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(சி/9624)


## தவறிவிட்டது

மாணிக்கம் குணரெத்தினம் ஆகிய நான் மோட்டார் சைக்கிளில் கைதடியில் இருந்து கோப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது எனது புடைவை பார்சல் ஒன்று கோப்பாய் சந்திக்கும் பாலத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் (31-10-99) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் தவறி வீழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும்முகவரியில் ஒப்படைத்துஉதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

மா. குணரெத்தினம்
நவா பான்சி ஹவுஸ்,
கைதடி.
( / 26)

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் கடமையாற்றும்
**நளினி**
அவர்களின் தகப்பனாரும்
**சி. புவனேந்திரன்**
அவர்களின் மாமனாருமாகிய
**சின்னத்தம்பி சுப்பையா**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வைத்திய பொறுப்பதிகாரி, வைத்திய உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
ஆயுர்வேத வைத்தியசாலை,
கைதடி.
(70604)

## கண்ணீர் அஞ்சலி

**வேலாயுதம் சிவசுப்பிரமணியதேவா**
(புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவர்)

அவர்களின் மறைவையிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள் சார்பாக சபை தனது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.
(சி/9625)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் உபதலைவருமான நாவற்குழியைச் சேர்ந்த
**இராசையா நல்லையா**

அவர்கள் 31—10—99 ஆம் திகதி காலமானதை யிட்டு அதிர்ச்சி அடைந்த நாம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

நாவற்குழி மத்தி ஐக்கிய நாணய சங்கம்,
நாவற்குழி, கைதடி.
(70611)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன்
**நடனேந்திரன் (கஜன்)**
அவர்களின் தந்தை
**தர்மலிங்கம்**

அவர்கள் காலஞ்சென்றதையிட்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பர்கள்.
இணுவில்.
[70597]

## சின்னம் சூட்டல்

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் இன்ரறக்ட் கழக தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் செல்வன் சி. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது

றோட்டரிக்கழக தலைவர் க. ஸ்ரீபதி முதன்மை விருந்தினராகவும் முன்னாள் றோட்டரிக்கழக தலைவர் அ. பஞ்சலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம)

## சாரணிய வழிகாட்டுநர் கூட்டம்

யாழ்.மாவட்ட சாரணியர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பி. ப. 2-30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல பாடசாலை சாரணிய வழிகாட்டுநர்களையும் (ஆசிரியர்) கலந்து கொள்ளுமாறு சாரணிய ஆணையாளர் கேட்டுள்ளார். [ஐ-4]


**A/L Day Class**
புதிய பிரிவு ஆரம்பம்
03 - 11 - 99 புதன்
8.30 மணி:
அனுமதிகளைப் பெறவும்.
**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[70602]

மாதாந்தப் பரீட்சை வினாவிடைகள்
எம்மிடம் குறைந்த அளவே உள்ளமையால்
வெகு விரைவில் பெற்றுக் கொள்ளவும்.
**BOND**
யாழ்ப்பாணம்.
[70601]

**ராஜா**
யாழ்ப்பாணம்
கார்த்திக் - நக்மா மற்றும் பலர் நடித்த
**மேட்டுக்குடி**
10 30, 2-30
(சி/9530)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன், குஷ்பு
**ரோஜாவைக் கிள்ளாதே**
07-11-99 முதல்
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70613)

**லிபேட்டி** அச்சுவேலி.
சத்தியராஜ், சுகன்யா கவுண்டமணி நடித்த
**உடன் பிறப்பு**
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
070 - 212678
(70521)


## மூவருக்கு விளக்க மறியல்

நெல்லியடி, நவ. 2

வடமராட்சிப் பகுதியில் இளம் பெண்ணைக் கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் பருத்தித்துறை பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியினால் பருத்தித்துறை மாவட்டப் பதில் நீதவான் அ. க. நடராசாவின் வாசஸ்தலத்தில் அவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் மூவரையும் நேற்றுவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (இ-8-109)

# மரண அறிவித்தல்கள்

## தியாகராசா தியாகேஸ்வரன்

(கணக்காய்வாளர், கொழும்பு)

இராமலிங்கம் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு முகத்துவாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா தியாகேஸ்வரன் நேற்று 1- 11- 99 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மீராவின் அன்புக் கணவரும் ரூபநிதா தியாசினியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொன்னம்பலம் தியாகராசா — தேவகி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வடிவேலு— மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் தியாகலிங்கம் தியாகசீலன், தியாகச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரமணன், தயாளன், லலிதா, திரவியம், நேசபவானி ஆகியோரின் மைத்துனரும், சிறீஸ்கந்தராசா, காலஞ்சென்ற செல்வராசா, மங்களராணி, அன்னம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை 3- 11- 99 புதன்கிழமை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தி. தேவகி
(தாய்)
இராமலிங்கம் வீதி,
உடுவில் கிழக்கு.
(70614)

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

காரைநகர் வேரக்குளத்தைப் பிறப்பிடமாகவும் பரந்தனை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பு மட்டக்குழியில் வசித்தவருமாகிய ஆறுமுகம் கணபதிப்பிள்ளை 01-11-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிஐயா—ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகனும் திரிபுரகல்யாணசுந்தரியின் (வவா) அன்புக் கணவரும் யோகநாதன் (இத்தாலி), சிவாநந்தன் (சுவிஸ்), சிவசத்தி (சுவிஸ்), ஞானேஸ்வரன் (சுவிஸ்), பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகாநந்தன் (ஆசிரியர், இறம்பைக்குளம் ம. வி.), கௌரியாம்பாள், தவமலர், சங்கீதா ஆகியோரின் மாமனாருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சு. க. கந்தசாமி
(சகலன்)
இல. 200 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(70616)

## திருமதி நல்லதம்பி தனலட்சுமி

குப்பிளானைச் சேர்ந்த நல்லதம்பி தனலட்சுமி 01-11-99 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் கனடாவில் உள்ள இராசதுரை அருட்செல்வதியின் [சுமதி] அன்புத் தாயாரும் இராசதுரையின் மாமியாரும் பிரதீபன், சதீசன், தர்சினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [02-11-99] செவ்வாய்க்கிழமை மாலை 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் காடாகரம்பை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. அன்னபூரணம்
[நேசம்]
குப்பிளான்,
ஏழாலை.
[சி/9637]

## திருமதி அன்னமுத்து நடராசா

(மாதகல்)

திருமதி அன்னமுத்து நடராசா நேற்று முன்தினம் 31—10-99 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் க. நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சண்முகரத்தினம் (கனடா), விஜயலட்சுமி, அன்னராஜா (பிருந்தாஸ் கிளினிக், வவுனியா), ஞானலட்சுமி (ஆசிரியை, மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (1- 11- 99) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. நடராசா
(கணவர்)
பிள்ளையார் கோயிலடி,
மாதகல்.
(70584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரிஸாவில் பெரும் அளவில் உதவிப் பணிகள் ஆரம்பம்

விசாகபட்டினம், நவ. 2

ஒரிஸாவில் ஏற்பட்ட பெரும் புயலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உதவிப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் மோசமான வானிலை உதவிப் பணிகளையும் பாதித்து வருகின்றது. உணவு மற்றும் உதவிப் பொருள்கள் மக்களுக்கு விரைந்து அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

நூற்றுக்கணக்கான மக்கள் இந்த அனர்த்தத்தில் இறந்திருக்கக் கூடும் எனவும் —

புயலினால் பாதிக்கப்பட்ட பல இடங்களுக்கு செல்ல முடியாமல் உள்ளதால் தெளிவான தகவல்களைப் பெறமுடியாமல் உள்ளது எனவும்— அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல பகுதிகளில் மழையும் மோசமான வானிலையும் உதவிப்பணிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளன.

வெள்ளத்தால் சூழப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவுப் பொட்டலங்களையும் இதர பொருள்களையும் கடற்படையின் ஹெலிக்கொப்டர்கள் வானிலிருந்து போட்டு வருகின்றன.

விசாகபட்டினத்திலிருந்து மூன்று கப்பல்கள் மூலம் உதவிப் பொருள்கள் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு இடங்களில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் ரயில்கள் மூலமும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஒரிஸாவில் புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தகவல் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் —

புயலுக்கு நேரடியாக இலக்கான கடற்கரைப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களுடன் தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன எனவும் — தகவல் தொடர்பு அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார்.

புயலினால் பாதிக்கப்பட்ட ஒரிஸாவுக்கு மற்றைய நாடுகளிடம் இருந்தும் உதவிகளைப் பெறுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

(இ-8)

# அத்திலாந்திக் சமுத்திரத்தில் எகிப்திய விமானம் வீழ்ந்தது

## 200 பேர் வரை பலியாகினர்

கெய்ரோ, நவ. 2

எகிப்திய விமானம் ஒன்று அத்திலாந்திக் சமுத்திரத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 200க்கும் அதிகமானோர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவின் கிழக்குக் கரைக்கு அப்பால் இந்த விமானத்தின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது வரை ஒரேயொரு சடலம் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய சடலங்களைத் தேடும் பணியில் தீவிரமாக தாம் ஈடுபட்டு வருவதாக கரையோரக் காவல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நியூயோர்கில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் சற்று நேரத்திற்குள் றேடார் திரையில் இருந்து மறைந்து விட்டதாகவும் —

தொடர்பு துண்டிக்கப்பட முன்னர் விமானத்தில் இருந்து ஆபத்து அழைப்பு வந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

# சனத்தொகை சம்பந்தமான 3 நாள் பிராந்திய மாநாடு

## காட்மண்டுவில் ஆரம்பமானது

அதிகரித்துவரும் சனத்தொகையினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தமான நாடாளுமன்ற அங்கத்தவர்களின் மூன்று நாள் பிராந்திய மாநாடு காட்மண்டுவில் நேற்று ஆரம்பமானது.

சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைபபுடன் இணைந்து சார்க் அமைப்பின் தென்கிழக்காசியப் பிராந்திய நிலையம் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தது.

சார்க் அமைபபின் பிராந்திய நிலையத்தைச் சேர்ந்த 10 அங்கத்துவ நாடுகளின் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இநத மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அதிகரித்து வரும் சனத்தொகையால் ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் முக்கிய இடத்தைப் பெற வேண்டும எனும் கருத்து நேற்றைய மாநாட்டில் முக்கியமாக ஆராயப்பட்டது.

பங்களாதேஷ், பூட்டான் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவு, வியட்நாம், நேபாளம், இலங்கை, தாய்லாந்து என்பன உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய அலுவலகத்தில் அங்கம் வகிக்கின்றன.

(இ-8

# ஜம்மு எல்லையில் இருந்து பாக். படை வெளியேறவேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

''ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இந்தியாவின் எல்லைக் கோட்டில் இருந்து பாகிஸ்தான் படைகள் வெளியேற்றப்பட வேண்டும். இதையே அமெரிக்கா விரும்புகின்றது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திருமதி மெடலின் ஆல்பிரைட் தெரிவித்துள்ளார்.

வாஷிங்ரனில் செய்திபாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''இந்தியாவும், பாகிஸ்தானும் அந்தப் பிரதேசத்தில் பதற்றத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தப் பிரதேசம் அமைதியாக இருக்க வேண்டும் என்பதே எமது அவாவாகும்''—என்று மேலும் தெரிவித்தார்.

(க-3)

# சார்க் மாநாடு பின்போடப்படுமா?

டாக்கா, நவ. 2

நடைபெற உள்ள சார்க் உச்சி மாநாட்டை ஒத்தி வைப்பது பற்றி, சார்க் நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கு இடையே பொதுக் கருத்து எட்டப்பட்ட பின்னரே முடிவு செய்யப்படும் என்று பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் அப்துல் ஹாஸன் சவுத்ரி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இடம் பெற்ற திடீர் இராணுவப் புரட்சிக்குப் பின் மாறியுள்ள அரசியல் நிலைமைகளைக் கருதி இந்த உச்சி மாநாடு ஒத்திப் போடப்படலாம் என நிலவிய கருத்து தொடர்பாக அவரிடம் கேட்டபோது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

(இ-8)

## உலக அரங்கில்

# இந்தியா மீது விதிக்கப்பட்ட தடையை ஜப்பான் நீக்கும்

புதுடில்லி, நவ 2

அணு வெடிப்புப் பரிசோதனையின் பின்னர் இந்தியா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்வது குறித்து ஜப்பான் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

விரிவான அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக இந்தியாவுடன் தனக்கு இருக்கும் உறவுகள் தொலைநோக்கு உடையவை என ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளதாக ஜப்பானிய நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் சிலவற்றை சென்ற வாரம் அமெரிக்கா நீக்கியமை குறிப்பிடத்தக்கது

(இ-8)

# இடம்பெயர்ந்து இன்னலுறும் தமிழருக்காகப் பிரார்த்தியுங்கள்

## இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 2

சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சொல்லொணா வேதனைகளால் அல்லலுறும் மக்களுக்கு விமோசனம் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கும்படி சகல இந்துப் பெருமக்களையும் கேட்டுக் கொள்கின்றோம். இதுவே அதிகூடிய அர்ப்பணம் ஆகும்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு விடுத்த செய்தியில் அகில இலங்கை இந்து மாமன்றம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்துமாமன்றம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தீபாவளி ஒரு தெய்வீக வழிபாடு தினமாகும். அநீதியையும் அசுரத் தன்மையையும் ஒழித்து நீதியையும் தெய்வீகத் தன்மையையும் நிலைநாட்டும் ஒரு நன்னாள்.

இந்த நாளில் கொண்டாட்டங்களிலும், வீணான கேளிக்கைகளிலும் ஈடுபடுவதனை தவிர்த்து மக்கள் பூஜைகளிலும், வழிபாடுகளிலும் ஈடுபடுதல் வேண்டும்.

கடந்த இரு தசாப்த காலமாக நடைபெற்று வரும் போர் நிறுத்தப்பட்டு, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் நிம்மதியுடனும், சமத்துவத்துடனும், சுயமரியாதையுடனும் எவ்வித பாகுபாடுமின்றி வாழ்வதற்கு அரசாங்கமும், அரசியல் தலைவர்களும் மேலும் தாமதியாது முன்வரவேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகளை அரசியல் பகடைக் காய்களாகப் பாவிக்க முயல்வது நிறுத்தப்பட்டு, அரசியல் லாபம் கருதாது அரசியல் தீர்வுகாண தலைவர்கள் இணங்காத காரணத்தால் தான் இந்நாட்டு மக்களின் உயிர்கள் அனாவசியமாக நாளாந்தம் பலியாகிக்கொண்டிருக்கின்றன.

பலர் அத்தியாவசிய தேவைகளின்றி சொந்த நாட்டிலே அகதிகளாக வாடுகின்றனர். இத்துயர் மிகு காலத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப ஒரு நியாயமான அரசியல் தீர்வு கிடைத்து, மக்கள் விமோசனம் பெற்று, இந்த நாட்டில் மீண்டும் அமைதியும் சமாதானமும் நிலவ அருள் மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தீபாவளி தினத்தன்று ஆலயங்களுக்குச் செல்ல முடியாத இநதுப் பெருமக்கள் வீடுகளில் இருந்தாவது பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிரார்த்தனை மூலமாக இறைவனுக்கு ஏற்றி வைக்கப்படும் தீபஒளியைப் போல, அனைத்து மக்களினதும் வாழ்விலும் விரைவில் இன்ப ஒளி பிரகாசிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

மக்கள் சேவையே மகேசுவரன் சேவை என்பதனை மறவாது அகில இலங்கை இந்துமாமன்றம் வன்னியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்களைத் தொடர்ந்தும் சேகரித்து வழங்கி வருகின்றது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிவாரணப் பொருள்கள் தொடர்ந்து [illegible] றன — என்றுள்ளது.

(ம)

# எதிரொலி..

இடியன்

- ● இப்போதைய தலைமை தொடர்ந்தால் ஐ.தே.க வெற்றிப்பாதைக்குச் செல்லவே மாட்டாது என்கின்றார் ஐ தே க. பிரமுகரான சிறிசேன கூரே.
- ★ சாயம்போடுகிறாரா? அல்லது சாத்திரம் சொல்கிறாரா
- ● அநுராதபுரத்தில் ஜனாதிபதி பேசிய கூட்டத்திற்குச் சென்ற பொதுமக்களிடமிருந்து தீப்பெட்டி, சிகரெட் லைட்டர் போன்றவை பாதுகாப்புப் பிரிவினரால் பறிக்கப்பட்டன!
- ★ மக்களுக்கு 'வெளிச்சம்'' தேவையில்லை என நினைத்து விட்டார்களோ?
- ● புலிகளுடன் பேசாமல், இனப்பிரச்சினை தீராது என பி.பி.ஸி பேட்டியில் ஜனாதிபதி கூறியுள்ளார்.
- ★ தமிழ் மக்களும் தன்னைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதறகாக சந்திரிகா தேர்ந்தெடுத்த வசனமாக இது இருக்கக் கூடுமோ?...
- ● சில்லறைத் தட்டுப்பாட்டினால் பொருள்களைக் கட்டியடிக்கும் வேலை கள்ளுத் தவறணைகளிலும் இடம் பெறுகின்றதாம்!
- ★ சில்லறைகள் இல்லாதபடியால் தொல்லை ''கள்'' பெருகுகின்ற நிர்ப்பந்தம்!
- ● டீசல் விலை உயர்வை ஆட்சேபித்து அகில இந்திய லொறி உரிமையாளர் சங்கம் மேற்கொண்டிருந்த நாடளாவிய வேலை நிறுத்தம், கைவிடப்பட்டு விட்டது.
- ★ ஜெயலலிதாதான் பாவம்! தமிழகத்தில் அவர் நடத்தத் திட்டமிட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் டீஸல் இல்லாத வாகனமாகி விட்டது!
- ● இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே, உரிய காலத்திற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்வு நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ★ பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் தீர்வாக அமையுமா அல்லது ஏதோ ஒரு வகையிலே திணிக்கப்படும் தீர்வாக அமையுமா என்பது தெளிவாக வில்லையே!
- ● மாவின் விலை குறைக்கப்பட்ட போதிலும், சில இடங்களில் பழைய விலைக்கே அது விற்கப்பட்டு வருகின்றது.
- ★ ''கூடிய விலைக்கு வாங்கிய இம்மாவைச் சும்மா குறைத்து விற்க முடியுமா?'' எனச் சில வியாபாரிகள் கேட்கக்கூடும்!
- ● போபர்ஸ் ஊழல் தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டோர் பட்டியலிலிருந்து ராஜீவ் காந்தியின் பெயர் நீக்கப்படாவிட்டால், பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றில் காங்கிரஸ் ஈடுபடுமாம்!
- ★ ஆர்ப்பாட்டத்தால் நிர்ப்பந்திப்பதை விட, நீதிமன்றத்தில் வாதாடி 'நிரபராதி' என நிரூபிப்பதே கௌரவமானது என்பதை நேரு குடும்பத்தவராகத் தன்னைக் கருதிக்கொள்ளும் சோனியாவால் உணர முடிய வில்லையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய, பழைய படப்பிரதிகள் Sony 14'' T. V. (Colour) Video Deeck, விற்பனைக்கு. 255, அரசடி வீதி, கந்தர் மடம். (70582)

### தவறிவிட்டது

கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியைச் சேர்ந்த மோகனகராசா ஜெயராஜ் என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0902042712) 27-10-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ. குணநாயகம் K. K. S. றோட், 4ஆம் கட்டை ஸ்ரீலங்கா பாம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (70585)

மகாலிங்கம் சங்கீதா சோதி வேம்படி லேன், மானிப்பாய் என்ற முகவரியுடைய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (788243677 V) கோண்டாவில் சந்திக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (70578)

## திருட்டுக்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ், கச்சேரி — நல்லூர் வீதி மற்றும் கோயில் வீதி ஆகியவற்றில் அண்மைக் காலமாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள ஒரு வீட்டில் ஜன்னலை உடைத்து உள்ளே புகுந்த திருடர் கோஷ்டி ஒன்று ஒரு தொகைப் பணத்தையும் மற்றும் பல பெறுமதி மிக்க பொருள்களையும் களவாடிச் சென்றுள்ளது.

கடந்த வாரமும் இதே பகுதியில் இப்படியான திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்றும் இது தொடர்பாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-8-30)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. பா. சுப்பிரமணியம் J.P., U.M

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபையின் சட்ட ஆலோசகரான, சட்டத்தரணி பா. சுப்பிரமணியம் சமாதான நீதிவானாகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டமையைப் பாராட்டுவதுடன், எல்லாம்வல்ல ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அருள்புரிய வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்
தேவஸ்தானம்.

(70590)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

லயன்ஸ் கழகத்தினூடாக மக்களுக்கு ஆற்றிய சேவைக்காக
லயன்ஸ் கழகத்தின் சிபார்சுக்கமைய
அகில இலங்கை சமாதான நீதிவான்களாகத்
தெரிவு செய்யப்பட்டுள்ள
மூத்த லயன்ஸ் கழக அங்கத்தவர்களாகிய

**லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்**
**லயன் கே. வி. முத்துக்குமாரசாமி**
**லயன் எஸ். பத்மநாதன்**

ஆகியோரை கோப்பாய் லயன்ஸ் கழகம்
பாராட்டி வாழ்த்துகின்றது.

எவ். ஏ. சில்வெஸ்ரர்
**லயன்ஸ் கழகம்**
கோப்பாய்.

(சி/9620)

## இலவச வகுப்பு

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை
இவற்றுக்குரிய வழிகாட்டல் வகுப்பு 05-11-99
வெள்ளி காலை 9 மணி தொடக்கம் 1 மணி வரை நடைபெறும்.

அச்சடித்த குறிப்புகள் மட்டும்— 20 ரூபா

ஆசிரியர்: அ. குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

[70587]

## வாழ்த்துகின்றோம்

யா / மல்லாகம்
**விசாலாட்சி வித்தியாசாலை**
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் (1999)
சித்தியடைந்த

செல்வி த சுகந்யா – 133 புள்ளிகள்
செல்வி சி. சகிலா – 129 புள்ளிகள்

ஆகியோரையும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த மற்றும் 4 மாணவர்களையும் ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[70594]

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திருமதி செ. நவரத்தினம்
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி செல்வரத்தினம் நடராசா

அவர்கள் 30—10—99 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டுத் துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்.
யா/கோப்பாய் மகாவித்தியாலயம்,
கோப்பாய்.

(70591)

## கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
## யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

01. வல்வெட்டித்துறை நகரசபைக் காரியாலயம் அமைத்தல் கட்டம் 11 இற்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களப் பிரதம எந்திரி அலுவலக கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இக்காரியாலயத்தில் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் — எம் 8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 500/- வையும், மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக 20,000/- வையும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம், அத்துடன் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4.45 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி,
பிரதம எந்திரி,
கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
01 — 11 — 1999.

(இ/9618)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாதேவி பரம்சோதி

தோற்றம்
29 – 11 – 1937

மறைவு
02 – 11 – 1995

உங்கள் ஆன்மா உய்தி பெற கூற்றுயிர் குடித்த நோன்றாட் பண்ணவன் தன்னைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்திர வளவு,
துன்னாலை தெற்கு.
கரவெட்டி.

(சி/9619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற அமர்வில் தவறாது சமுகம்தர அரச எம்.பிகளுக்கு அழைப்பு

## அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான விடுத்தார்

கொழும்பு, நவ. 2

நாடாளுமன்ற அமர்வுகள் இந்த மாதத்தில் நான்கு நாள்கள் கூடும்போது முக்கிய பிரேரணைகள் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதால் அரச நாடாளுமன்ற உறுப்பினர்களை சபையில்கட்டாயம் பிரசன்னமாக இருக்கவேண்டும் என்று அரசாங்க கட்சிக் கொறடாவான அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான கேட்டுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி சமுர்த்தி இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சுக்கான குறைநிரப்புப் பிரேரணையும்—

மறுநாள் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணையும்—

எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் வரவு—செலவுத் திட்ட அறிக்கைக்குப் பதிலாக இடைக்கால கணக்கு அறிக்கையும்— நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த நாள்களில் நாடாளுமன்றத்தில் சமுகம் கொடுத்து பிரஸ்தாப பிரேரணைகள் மீதான வாக்கெடுப்பில் தவறாது பங்குபற்றுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

[தி-க-3]

# 2 ஆயிரத்து 500 பயணிகள் காங்கேசன்வர கப்பலுக்கு பதிவு

திருமலை, நவ. 2

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு சப்பலில் பயணம் செய்வதற்கென இரண்டாயிரத்து 500 பயணிகள் திருமலை நகர பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

அடுத்த வாரம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் கப்பல் சேவையை எதிர்பார்த்து திருமலையில் ஆயிரம் பேரும், மன்னாரில் 300 அகதிகளும் வவுனியாவில் ஆயிரம் பேரும் கடந்த ஒரு மாதமாகக் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

## இலவச வெளியீடு

வரும் கந்தசஷ்டி காலங்களில் படிப்பதற்காக, கந்தரனுபூதி, கந்தசஷ்டி நூல்களை வழக்கம்பரை பஜனைச் சபையார் இலவசமாக வெளியிட்டுள்ளனர்.

நூல் தேவையானவர்கள் பஜனைச் சபையாரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-28)

## காங்கேசன் முகாமுக்கு

யாழ்ப்பாணம், நவ. 2

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் இன்று காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

(இ-5)

## அனலைதீவு வைத்தியசாலையில் சீரான சேவை

நெடுந்தீவு, நவ. 2

கடந்த ஜூலை மாதம் வரை வைத்திய அதிகாரி இன்மையால் பாதிக்கப்பட்டிருந்த அனலைதீவு வைத்தியசாலையில் இப்போது சீரான சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

ஜூலை முதலாம் திகதி தொடக்கம் மேற்படி வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் நோயாளிகள் முன்னர் அனுபவித்து வந்த சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று அனலைதீவு மக்கள் தெரிவித்தனர்.

(இ-111)

# நெல்நாற்றுக்கள் திருட்டு

தென்மராட்சி, நவ. 2

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள நெல்வயல்களில் நெற்பயிர்கள் (நாற்றுகள்) இனந்தெரியாதோரால் இரவோடிரவாக திருடப்பட்டு வருகின்றன.

கடும் மழை காரணமாக நாற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் பயிர்கள் அழிந்து போயுள்ளன. வெள்ளத்தினால் பாதிப்படையாத வயல்களில் உள்ள நெற்பயிர்களே திருட்டுப்போகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளம் காணப்படும் வயல்களில் நாற்று நடுகை மேற்கொள்ளப்படுவதால் ஒரு பிடி நாற்றுக் கட்டு ரூபா ஐந்து முதல் ஏழுவரை விற்பனை செய்யப்படுகிறது.

மீள் நடுகைக்காக வுளவுகளில் மேடையில் போடப்பட்ட நெல் நாற்றுக்கள் தினமும் டிராக்டர்கள், வண்டில்கள் ஆகியவற்றில் கொண்டு செல்லப்படுவதைக் காணமுடிகிறது.

(இ-117)

# பிரபாவுடன் பரிமாறிய கடிதங்களை ஜனாதிபதி வெளியிட வேண்டும்

## ஐ.தே.க. பொதுச்செயலர் கோருகிறார்

கொழும்பு, நவ. 2

விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் பேச்சு நடத்திய சமயம் அந்த அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனுடன் பரிமாறிய 40 கடிதங்களை ஜனாதிபதி வெளியிட வேண்டும் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள கோரியுள்ளார்

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இப்படிக் கேட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தீர்மானித்தது. வடக்கு— கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவே என 23 ஆம் திகதி அநுராதபுரத்தில்நடந்த கூட்டத்தில் ஜனாதிபதி அறிவித்தார்.

ஆனால்20 ஆம் திகதிநாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பெருஞ் சதி நடைபெறுகின்றது. இதில் இருந்து தப்பிக் கொள்ளும் முகமாகவே அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துகின்றேன் என ஜனாதிபதி குறிப்பிட்டார்

வடக்கு—கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கவே 1994ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அவருக்கு ஆட்சிப் பலத்தைப் பெற்றுக் கொடுத்தனர். அவருக்குக் கிடைத்த மக்கள் பலத்தைக் கொண்டு புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியது மட்டுமல்ல. இரகசியமாக 40 –க்கும் மேற்பட்ட கடிதங்களைப் பரிமாறிக்கொண்டார். எனினும் மேற்கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் கடிதப் பரிமாற்றம் தொடர்பாகவும் நாட்டு மக்களுக்கு எதுவுமே தெரியாது.

இவையனைத்தும் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எதிர்க்கட்சியும் நாட்டு மக்களும் எந்த இடைஞ்சலும் ஏற்படுத்தாது இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அன்று சந்திரிகாவும் பிரபாகரனும் பரிமாறிக்கொண்ட கடிதங்கள் அனைத்தும் இன்னமும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. அது ஏன் என்று எதிர்க்கட்சிக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியவில்லை.

இதேவேளை மீண்டும் வடக்கு—கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க ஆட்சியைப் பெற்றுத் தருமாறு கேட்கும் போது 94 இல் அவருக்குப் பெற்றுக் கொடுத்த ஆட்சியினால் அன்று நடந்த சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும், பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்கள் தொடர்பாகவும் மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

சந்திரிகாவுக்கும், பிரபாகரனுக்கும் இடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட 40-க்கும் மேற்பட்ட கடிதங்களை ஜனாதிபதி வேட்பு மனுத் தாக்கல் செய்யுமுன் மக்களுக்குப் பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும் என்றுள்ளது.

(இ-3-21)

# ஏறாவூரில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி; இருவர் காயம்!

மட்டக்களப்பு, நவ. 2

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இரு இளைஞர் காயமடைந்தனர்.

புன்னைக்குடாவில் உள்ள பாழடைந்த கட்டடம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்ததாகக் கூறப்பட்டது.

வெள்ளைத்தம்பி கபீர் (21 வயது) என்ற இளைஞனே உயிரிழந்தவர் ஆவார்.

அதே நேரம் — வந்தாறுமூலையில் வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 கிலோ நிறையுடைய குண்டு ஒன்று கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட படையினரால் கண்டு பிடிக்கப்பட்டுப் பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது.

(இ-3-21)

# மக்கள் முகம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முதலாம் தர நீதிமன்றப் பதிவாளராக கந்தையா இராசரத்தினம் நியமனம் பெற்றுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஆர். ரி. விக்கினராஜா முன்னிலையில் இவர் கடந்த ஒகஸ்ட் மாதம் 9 -ம் திகதி சத்தியப்பிரமாணம் எடுத்துப் பதவியேற்றுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசரத்தினம் பண்டாரப்பிள்ளை கந்தையா – தங்கைச்சிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனாவார்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவரான இவர் கொழும்பு சட்டமா அதிபர் காரியாலயத்திலும் பணியாற்றியுள்ளார்.

இரத்தினபுரி, வவுனியா கல்வித் திணைக்களங்கள், கிளிநொச்சி காணி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றிய பின் இரண்டாம் தர நீதிமன்ற பதிவாளராக ஊர்காவற்றுறை, பருத்தித்துறை நீதிமன்றங்களில் பணிபுரிந்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் எம். சிறீகாந்தாவுடன் இணைந்து 1958 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் கனகபுரம் இளங்கதிர் குழு வாழ்க்கைப்பண்ணைத் திட்டத்தை (பின்னர் படித்த வாலிப மேட்டு நிலத்திட்டமாக மாற்றப்பட்டது) ஆரம்பித்து செயற்பட்டார்.

கிளிநொச்சியில் கனகாம்பிகை அம்மன், ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமம் ஆகியவற்றில் சமய சம்பந்தமான விடயங்களில் முன்னின்று உழைத்தவர்.

அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் நீதி அமைச்சினால் இவர் நியமனம் பெற்றுள்ளார். (ஐ-152)

★ ★ ★ ★ ★

யாழ். சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையின் அதிபராக எஸ். எஸ். தங்கராஜா யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதிபர் தரம் II ஐச் சேர்ந்த இவர் இதற்கு முன்னர் யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமை புரிந்தவர்.

யாழ். சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் அதிபராக ப.ம. எட்வேட் யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். அதிபர் தரம் II ஐச் சேர்ந்த இவர் முன்னர் யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

இவர்கள் இருவரும் தமது கடமைகளைக் கடந்த 15 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுக் கொண்டனர். (ஐ-51)

★ ★ ★

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் திடீர் பரிசோதனைக்குழுப் பொறுப்பதிகாரி வீ. இராசதுரை, சிரேஷ்ட வீதிப்பரிசோதகர்கள் என். புவனசுந்தரம், எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளனர்.

இவர்களின் பிரிவுபசார வைபவம் அண்மையில் கோண்டாவிலில் உள்ள போக்குவரத்துச்சபை திடீர் பரிசோதனைக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது. [ஐ-27]

★ ★ ★ ★

யாழ். நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் புதிய அதிபராக சு இராசலிங்கம் இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் செயற்படும்படியாக யாழ். வலயக் கல்வித்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் தரம் ii ஐச் சேர்ந்த இவர் முன்னர் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்தார். [ஐ-51]

★ ★ ★ ★

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலைக்கு புதிய அதிபராக திரு. வி. ரி திருநாவுக்கரசு கடந்த முதலாம்திகதி தொடக்கம் தென்மராட்சி கல்வி வலயத்தால் நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் முன்னர் தனங்களப்பு அ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ—102)

★ ★ ★ ★

நயினாதீவைச்சேர்நத நா. விசுவலிங்கம் சமாதான நீதிவானாக கடந்த 4 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிவான் ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். முன்னாள் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபரான இவர் சைவப்புலவரும் சித்தாந்த பண்டிதருமாவார்.

சமூகப்பணியிலேயே தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தியுள்ள இவர் நயினாதீவின் முதலாவது பிரசித்தநொத்தாரிசாவார். நயினாதிவு நாகபூஷணி அம்மன்கோயில்யாத்திரீகர் தொண்டர் சபையின் முன்னாள் தலைவராகவும், நாகபூஷணி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையின் முன்னாள்செயலாளராகவும் தொண்டாற்றியதுடன், நயினாதீவு ஓய்வூதியர் சங்கத்தலைவராகவும், பிரசைகள் குழுவின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். [ஐ-15]

★ ★ ★

வேலணை பிரதேச செயலராக எஸ். கேதீஸ்வரன் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிவரும் கேதீஸ்வரன் இந்த மாதம் முதலாம் திகதி முதல் வேலணை பிரதேசச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் கோப்பாய் பிரதேச செயலராகவும் அவர் தொடர்ந்து கடமையாற்றுவார். உதவி அரசாங்க அதிபராக எஸ். இரத்தினம் தனது பணியைத் தொடருவார். (ஐ-111)

★ ★ ★ ★

உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலையை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் வ. பூபாலசுந்தரம் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பெற்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றார்.

இவர் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவரும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வணிகமாணி - சிறப்புப பட்டதாரியும் ஆவார்.

வடமராட்சிப் பிரபல பாடசாலைகளில் 3) வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் சிறப்புச் சேவையாற்றியுள்ளார். அத்தோடு இவர் இலங்கைச் சாரணீயச் சங்க ஆசிரிபர் பயிற்றுனருமாவார். (இ)

★ ★ ★

மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசா பதினான்கு மாத கால அமெரிக்க, கனேடிய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். இரண்டு நாடுகளிலும் தங்கியிருந்த வேளை புலம்பெயர்ந்த யாழ். மக்களின் வாழ்க்கை நிலையை இவர் ஆராய்ந்து வந்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னைமடியில் 01-06-1981

ஆண்டவன்அடியில் 29-10 1999

செல்வன்

## தெட்ஷணாமூர்த்தி வைகுந்தன்

அனலைதீவு 07 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. திருமதி பொ. தெட்ஷணாமூர்த்தி தம்பதிகளின் பாச மிகுமகன் தெட்ஷணாமூர்த்தி வைகுந்தன் 29-10-99 அன்று கொழும்பில் அகாலமரணமானார். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆலய சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீஎழுமங்கை நாச்சிமார் மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

'' ஓம் சாந்தி! ''

அவரின் பிரிவால் துயருறும்
அனைவருடன். ஸ்ரீஎழுமங்கை
நாச்சிமார் மனோன்மணி அம்பாள்
அறங்காவல் சபையினர்.

அனலைதீவு. (70586)

# வாந்திபேதி வவுனியாவிலும் பரவுகிறது

வவுனியா, நவ. 2

மழைகாலம் ஆரம்பித்துள்ளதையடுத்து வவுனியாவில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பூந்தோட்டம், மகாஇறம்பைக்குளம், நெலுங்குளம், பாலமோட்டை, நவ்வி போன்ற இடங்களில் இந்நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட இடங்களிலும் 300க்கும் மேற்பட்டோர் வாந்திபேதியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

[இ-5]

# சமய அறிவுப் போட்டி

சுழிபுரம், நவ. 2

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தினர் வருடா வருடம் நடத்தும் சமய அறிவுப் போட்டியை இம் முறையும் நடத்தவுள்ளனர்.

போட்டி பரிசளிப்பு எதிர்வரும் திரு வெம்பாவை நாள்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-28)

# மயான மடம்

சுழிபுரம், நவ. 2

சுழிபுரம், சம்புத்துறைப் பகுதிக்கு சமீபமாக மயான மடம் ஒன்றும் கிணறு ஒன்றும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கட்டப்பட்டு வருகின்றன.

(ஐ-28)

# நூலகம்

சுழிபுரம், நவ. 2

காரைநகர் மணிவாசகர் சபை கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம் என்ற பெயரில் நூலகம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சபையின் வைர விழா நினைவாக இந்த நூலகம் விளங்கவுள்ளது.

இதன் திறப்பு விழாவை மார்கழித் திருவாதிரையன்று நடத்த முடிவாகியுள்ளது.

[இ-28]

# சங்கப் புனரமைப்பு

சண்டிலிப்பாய், நவ. 2

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் மேற்குப் பிரிவு அலகுகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இந்தப்பிரிவில் 25 அலகுகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இருப்பதாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களை புதிய உறுப்பினர்களாக சேர்த்து இந்த அலகுகளை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரிவின் செயலாளர் இ. கனகராசா தெரிவித்தார். (இ-135)

# ஓராண்டு நினைவஞ்சலி



வேலணை தெற்கு

அமரர்

## டாக்டர் ஐயம்பிள்ளை கந்தையா J P.

(R. I. M. P. (Cey) Retired A. M. O.)

தோற்றம் 28-11-1927

மறைவு 13-11-1998

ஐப்பசித் திங்களிலே அருகருகே எங்களுடன்
கந்தன் புகழ் பாடிக் கருத்துரைகள் வழங்கிவிட்டு
ஓடிச் சென்ற வருடமதில் கந்தனடி சேர்ந்த உம்மைத்
தேடி வரும் அன்பருக்கு சேதி என்ன சொல்வதையா!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முருகானந்தா வைத்திய நிலையம், ஸ்கந்தபுரம்.

நடனமுருகன் வைத்திய நிலையம், வேலணை.

(70579)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1962 — 03 — 15 (இலங்கை)



ஆண்டவன் அடியில் 1998 — 11 — 13 (சுவிஸ்)

அமரர்

## செல்லையா சிவாஈஸ்வரன்

ஆண்டுத் திதி: 02 — 11 — 1999

ஆருயிரே என்னை அரவணைத்த தெய்வமே
ஆண்டு ஒன்று அல்ல ஆயிரம் ஆயிரம் சென்றும்
ஆறுமோ என்நெஞ்சு யார்துணை ஐயா
ஆயிரம் உறவுகள் இருந்துஎன்ன அப்பா
ஆதரிப்பார் யார்உளர் உம்மைப்போல் இங்கு
யார்இருந்தும் எங்கள் அப்பாஆகுமோ அப்பா
ஆலமரமாய் ஆறநிழல் தந்துநின்றீர் எமக்கு
ஆண்டுகள் பலசென்றும் தம்பியே அண்ணாவே
ஆவலுடன் வருவாய் என்றே நம்பினோம்
ஆறாத்துயரில் வாடுகிறோம் உன்அன்பு முகம்காண
கண்மணியே கண்ணாடிப் பிறேமுள் இருந்து
கண்விளித்து பார்க்கிறாய் உன் அம்மாவை
கதைகேட்பேன் சொல்வாயா உன் வாயால்
எனக்கு
காப்பாற்ற வழிஇன்றி கை விட்டோமே
காண்போமா இன்னும் ஒருமுறை உன்னை
உன் ஆத்மா சாந்திபெற வேண்டு கிறோம்,

குடும்பத்தினர், உறவினர்.

செல்வரங்கம்,
இணுவில் மேற்கு.

(70548)


# சாயி தொலைத் தொடர்பு நிலையம்

## SAYEE COMMUNICATION

154, Dutch Road,
Uduvil.

154, டச் றோட்,
உடுவில்.

°° குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவை °°
(இரவு பகல் சேவை)

குறிப்பு:
1. உள்வரும் அழைப்புக்கள் உடனுக்குடன் உங்கள் இல்லங்களுக்கு அறிவிக்கப்படும்
2 வாடிக்கையாளர்களின் நன்மை கருதி **01 - 11 - 99** இல் இருந்து **10 - 11 - 99** வரை உள்வரும் அழைப்புக்கள் கட்டணம் எதுவும் இன்றி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உள்நாடு. 070-212589
வெளிநாடு: 0094-70-212589

- உரிமையாளர்

(70589)

எண்ணத் தெரிவுக்கு வண்ணக்கலைக் கூடமாம்

# புதிய சண்முகானந்தாவின் மாபெரும் மலிவு விற்பனை

வாடிக்கையாளரின் நன்மை கருதி 1 - 11 - 99 இல் இருந்து 6 - 11 - 99 வரை சிறப்புத் தள்ளுபடியில்
உங்கள் புடைவைத் தெரிவுகளுக்கு முந்துங்கள்.

# புதிய சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

23 (58), பெரியகடை, யாழ்ப்பாணம்.

(70580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஒழுங்கான தேர்தல் அவசியம்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதத்தில் நடைபெறத் திகதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது. ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதும் சந்திரிகா குமாரதுங்கா வெல்லும் பட்சத்தில், நாடாளுமன்றத் தேர்தலும் அடுத்து நடைபெறும்.

ஜனநாயகத்தின் பிரதான அம்சம் மக்களின் வாக்களிக்கும் உரிமையாகும். வாக்குரிமை நடைமுறையாகும் தேர்தல்களும் முக்கியமானவையே. தேர்தல் மூலம் மக்களாட்சி நடத்தக் கூடிய தலைவர்களையும் பிரதிநிதிகளையும் மக்கள் தேர்ந்து எடுக்கிறார்கள்.

ஆகையால் தேர்தல்கள் நேர்மையாகவும் மோசடிகள், குளறுபடிகள் இல்லாமலும் நடைபெறுவது மிக அவசியம். அதுமட்டுமன்றி தேர்தல்கள் சுதந்திரமானவையாகவும் நீதியானவையாகவும் இருக்க வேண்டும்.

மேற்கூறியவற்றுக்கு முரணாகத் தேர்தல்கள் நடைபெறுமானால், மக்கள் விரும்பி வாக்களித்த தலைவர்களைவிட மற்றவர்கள் ஆட்சிபீடம் ஏறிவிடுவர். அது ஜனநாயகத்தை, மக்கள் ஆட்சியைச் சாகடிப்பதாகும்.

வாக்களிப்பு, எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி மக்கள் தாங்கள் விரும்பியவருக்கு வாக்குப் போடக் கூடியதாகச் சுதந்திரமாக நடைபெறுவது எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு—

வாக்குகளை எண்ணுதல், முடிவுகளை அறிவித்தல் ஆகியவற்றில் நேர்மையும் நீதியும் கடைப்பிடிக்கப்படுவதும் அவசியம்.

மோசடி, கட்டாயப்படுத்துதல் குழப்பம், வன்முறைகள் எதுவும் இல்லாமல் தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் திணைக்களத்தினதாகும் — அரசாங்கத்தினதாகும்.

முந்திய காலங்களை விட இப்போதெல்லாம், தேர்தல்களில் கள்ளவாக்குப் போடுதல், வாக்களிக்காதவர்களின் வாக்குகளை மோசடி செய்து ஒரு குறிப்பிட்ட கட்சிக்காக அல்லது வேட்பாளருக்காகப் போடுதல், வாக்களிக்க வருபவர்களைத் தடுத்தல், வாக்களிப்பு மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களில் வன்செயல் புரிந்து குழப்பம் விளைவித்தல், அவற்றைக் கைப்பற்றுதல் என்பன சர்வ சாதாரணமாகி விட்டன.

ஆகையால் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமானதாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக, கண்காணிப்புக் குழுக்கள் அமர்த்தப்படுவது பல நாடுகளில் தேவையாகிவிட்டது. உள்நாட்டுக் கண்காணிப்புக் குழுக்களால் சீரான தேர்தலை உறுதி செய்ய முடியாத பட்சத்தில் சர்வதேசக் கண்காணிப்புக் குழுக்களையும் சேவைக்கு அமர்த்துவது அவசியமாகிறது.

இலங்கையில் இதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்ற பாணியைநோக்கும் போது, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது சர்வதேச கண்காணிப்புக் குழுக்களின் சேவை கட்டாயமானதாகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சீராகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதன் பொருட்டு சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் அவசியம் என்று ஐக்கியதேசியக் கட்சி வலியுறுத்தி உள்ளது. சர்வதேசம் [illegible] ஒவ்வாமை கொள்ளும் அரசுத் தரப்பு தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் அவசியத்தை உதாசீனம் செய்யக் கூடாது.

அப்போது தான், முறையான தேர்தல் நடைபெற்றதாகக் கொள்ள முடியும். தேர்தலுக்கும் பெறுமதி உண்டாகும். சர்வதேச கண்காணிப்புக் குழுக்களை அழைத்து தேர்தலை சீராக்க அனைத்துத் தரப்பும் உதவ வேண்டும்.

# தீவுப்பகுதிக்கான போக்குவரத்தில் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிகளுக்கு நாளாந்தம் கடமையின் நிமித்தம் செல்லும் அரசாங்க ஊழியர்களும் சொந்த விடயங்கள் காரணமாகச் செல்லும் பொது மக்களும் போக்குவரத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

சீரான போக்குவரத்து வசதிகள் இன்மை, சோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் மற்றும் வீண் காலதாமதங்கள், பொருள்களை எடுத்துச் செல்வதில் உள்ள தடைகள், வதிவிடப் பாஸ் பெறுவதில் உள்ள சிக்கல்கள் என்பன அத்தகைய பிரச்சினைகளுள் சிலவாகும்.

### போக்குவரத்துப் பிரச்சினை

யாழ் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தீவுப்பகுதிகளின் போக்குவரத்துக்கென சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் பழுதடைந்து பயணிகளை நடுத்தெருவில் விட்டுவிடும் சந்தர்ப்பங்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றன.

இதனால் பயணிகள் உரிய நேரங்களில் சொந்த இடங்களுக்குத் திரும்புவதிலோ, அரச ஊழியர்கள் வேலைத் தலங்களுக்குச் சென்றடைவதிலோ பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக யாழ்— குறிக்காட்டுவான் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களே அனேகமாக இடை நடுவில் இவ்வாறு சேவையை நிறுத்திக் கொள்கின்றன. இதனால் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொறியியல் சேவைப் பகுதியினர் அடிக்கடி தீவுப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

குறிக்காட்டுவான் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் பலவும் விரைவில் பழுதடைந்து விடுவதற்கு வேலணைத்துறையில் இருந்து குறிகாட்டுவான வரையிலான பிரதான வீதி கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தம் செய்யப்படாமையும் ஒரு காரணமாகும்.

தற்போது வீதி திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் கூட பணிகள் பெரிதும் மந்தகதியில் இடம் பெறுவதாகவே தெரிகிறது. வீதி திருத்தம் செய்வதற்குரிய தார் மற்றும் கல் முதலியவற்றை அப் பகுதிக்கு கொண்டு செல்வதில் சம்பந்தப்பட்டவர்கள் பல்வேறு ரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து வேலணை—வங்களாவடி ஊடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 780 ஆம் இலக்க பஸ்ஸுக்கான வழமையான பாதை [வேலணை சேர். துரைசுவாமி ம. வி ஊடான] மீளக்குடியமர்வின் பின் கடற்படையினரால் மூடப்பட்டுள்ளமையும்.

அதற்காக வேலணை அம்பிகை நகர்ப் பகுதியூடாக ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாதை பஸ் போக்குவரத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்காமையால் அந்தப் பாதை ஊடாகச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதும் வழமையாகி விட்டன.

இதேவேளை பிற்பகல் நேரங்களில் தீவுப்பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ்சேவைகள்குறைந்து காணப்படுவதால் தீவுப்பகுதிகளில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் பலரும்

**நிதிந்தன்**

தனிப்பட்ட அலுவல்களுக்காகத் தீவுப்பகுதிகளுக்குச் சென்று திரும்பும் பொதுமக்களும் இடநெருக்கடியின் மத்தியிலேயே பயணம் செய்ய வேண்டி உள்ளது,

பொது மக்களுடன் இணைந்து சராசரியாகத் தினமும் 10 அல்லது 15 கடற்படையினரும் இவ்வாறு பயணம் செய்யும் நிலையும் காணப்படுகிறது.

### சோதனை நிலையங்களில் வீண் காலதாமதங்கள்

தீவுப்பகுதிக்குச் செல்லும் சகலரும் அல்லைப்பிட்டியில் உள்ள கடற்படையினரின் சோதனைச்சாவடியில் சோதனைக்கு உள்ளாக்கப்படுவது வழமையாகும். பயணிகள் அனைவரும் பஸ்களில் இருந்து இறக்கப்படுவதுடன் சுமார் 250 மீற்றர் தூரம் நடந்து செல்லுமாறு பணிக்கப்படுகின்றனர்.

அதேவேளை தீவுப்பகுதிக்குச் செல்லும் வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் கட்டாயம் அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் தமது அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து பாஸ் பெற்றுச் செல்லவேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பாஸும் ஒரு நாள் மாத்திரமே செல்லுப்படியானதாகும்.

இதனால் தீவுப்பகுதியில் உள்ள தமது உறவினர் வீடுகளுக்குச் செல்வோர் குறித்த தினத்திலேயே யாழ்ப்பாணம் திரும்பி விடவேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்படுகிறது.

அதேவேளை புங்குடுதீவு மடத்துவெளி மற்றும் வேலணைத்துறை போன்ற இடங்களில் உள்ளசோதனைச் சாவடிகளிலும்பொதுமக்கள் பாஸ் பெறுதல் மற்றும் சோதனைகளுக்காக நீண்டநேரம் தங்கி நிற்க வேண்டிய நிலை உள்ளது.

காலை 7 மணிக்கு தீவு பகுதிக்குச் செல்லும் ஆசிரியர் ஒருவர் மீண்டும் மாலை 5 மணி அல்லது 6 மணிக்கே யாழ். நகரத்தை வந்தடைய நேரிடுவதாக [ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### பொருள்களை எடுத்துச் செல்லத் தடை

தீவுப்பகுதியில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் என்றாலும், தனியார் நிறுவனங்கள் என்றாலும் சரி எந்தவொரு பொருளையும் தீவுப் பகுதிக்குஎடுத்துச்செல்வதானால் கடற்படையினரின் அனுமதியை முன்கூட்டியே பெறல் வேண்டும்.

பொதுமக்கள் பலரும் தீவுப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். மத்திய பஸ் நிலையத்தின் இன்றைய நிலைமை எதனால்?

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் வெள்ளம் நிற்பதால் பிரயாணிகள் படும் அவலம் குறித்து 17-10-1999 உதயன் இதழில் செய்தியும், அடுத்த நாள "யாழ்ப்பாணம் பஸ்நிலையம்" என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கமும் பிரசுரமாகி இருந்தன.

அவற்றை அடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் நிலைமையை விளக்கி எழுதியுள்ள கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அடுத்த தரப்பினரான யாழ்.மாநகர சபையும் தனது நிலையை விளக்கினால் மக்கள் —பிரயாணிகள்— இது விடயத்தில் தெளிவு பெற உதவும்.

இப்பேருந்து நிலையம் கட்டப்பட்ட போது, இப்பேருந்து நிலைய நிலம் முற்றாக கல் பதித்து தார் போடப்பட்டது. மழை பெய்யும் போது இப்பேருந்து நிலையத்திலிருந்து வெளியேறும் வெள்ள நீர் வட—மேற்கு மூலையிலுள்ள வாய்க்காலினால் வெளியேற்றப்பட்டது. இப்பேருந்து நிலையத்தில் தேங்கும் மழைநீர் உடனடியாக வெளியேற்றக் கூடியளவு பெரிய வடிகால்கள் அப்பொழுதே அமைக்கப்படவில்லை. என்றாலும் அப்பொழுது பேருந்து நிலையத்தில் தேங்கும் மழைநீர்சற்றுத் தாமதமாகியேனும் முற்றாக வெளியேறியது மழை பெய்து ஒருசில மணிநேரங்களில், மழை வெள்ளநீர் முற்றாக வழிந்தோடியதால் பிரச்சினை அவ்வளவு பெரிதாகத் தென்படவில்லை.

இந்திய இராணுவம் யாழ். குடாநாட்டில் நிலைகொண்டிருந்தது முதல் அதன் பின்னர் தொடர்ச்சியாக சிலரது செல்வாக்குடன் [illegible] வர்கள் சிலர் யாழ். பேருந்து நிலையக் காணிக்குள் அடாத்தாக கடைகளைக் கட்டி எழுப்பினார்கள். இவ்வாறு கட்டப்பட்ட கடைகளில் சில கழிவுநீர் செல்லும் வாய்க்காலுக்கு மேலும் கட்டப்பட்டது. இதனால் இவ்வாய்க்காலின் செயற்பாடு குறையத் தொடங்கியது. மழை பெய்யும் நேரங்களில் தேங்கிநிற்கும் வெள்ளம் வெளியேற முடியாது முழுப் பேருந்து நிலையமும் பாதிக்கப்பட்டது,

இக்கடைகள் கட்டப்பட்டமையால் ஏற்பட்ட தற்போதைய இக்கட்டான நிலையை விளக்கி மாநகரசபை உட்பட பல நிர்வாகங்களுக்கும் என்னால் எடுத்துக் கூறப்பட்டது ஒருமுறை மாநகரசபை மராமத்துப்பகுதி (Works Department) ஏதோ சிறு திருத்தங்கள் செய்து, மழைநீர் சற்று விரைவாக வெளியேறச் செய்யப்பட்டது.

எமது பேருந்து நிலையக் காணிக்குள் பலாத்காரமாகக் கட்டப்பட்ட இக்கடைகள் வாய்க்கால்களுக்கு இடைஞ் [illegible] மாநகரசபையின் அங்கீகாரமும் இல்லாமல் கட்டப்பட்டது. வடிகால் நீர் வெளியேற்றம் சம்மந்தமாக எதுவித திட்டமும் இல்லாமல் கட்டப்பட்ட இக்கட்டடங்கள் வெள்ள வாய்க்காலின் வெளியேற்றத் திறனை குறைப்பது மாத்திரமல்லாது, கடைகளிலிருந்து வீசப்படுகின்ற கழிவுப் பொருள்கள் இக்கடைகளுக்கு அருகிலுள்ள வெள்ளம் வழிந்தோடும் மதகையும் அடைக்கத்தொடங்கின.

வேறு வழியற்ற நிலையில் எமது பேருந்து நிலையக் காணியை உயர்த்துவதே வெள்ளம் தேங்குவதைத் தடுப்பதற்கு ஏற்ற ஒரே வழியாக இருந்தபடியால், மண் மற்றும் கட்டட இடிபாடுகளினால் இக்காணியை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு உயர்த்தப்பட்ட பேருந்து நிலையம் காலக்கிரமத்தில் கடும்மழை காரணமாக, உயர்த்தப்பட்ட மண் சிறிது சிறிதாகக் அரித்துச் செல்லப்பட்டது. மேலும் மழை காலத்தில் எமது பாரமான பேருந்துகள் ஓடுவதன் காரணமாக சிறு சிறு பள்ளங்கள் ஏற்பட்டு அவற்றுள் மழைநீர் நின்று சேறும் சகதியுமாகி மக்கள் நடமாட முடியாதளவு சீர்குலைந்துள்ளது.

இதனை நிவிர்த்தி செய்வதாயின் எமது நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் மேலே கூறப்பட்ட வட-மேற்கு மூலையிலுள்ள வெள்ளம் வெளியேறும் வாய்க்கால் பெருப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு பெருப்பிக்கப்பட்டால் மழைநீர் தேங்காது விரைவாக வழிந்தோடிவிடும். பேருந்து நிலையம் சேறும் சகதியுமாக இருக்காது.

எனவே இதனைச் செய்யும் பொறுப்பு யாருடையது? யார் இதனைச் செய்வது? சுமார் எட்டு இலட்சம் மக்கள் வாழ்ந்த குடாநாட்டில் தற்பொழுது சுமார் ஐந்து இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் நாளாந்தம் சராசரி 26 ஆயிரம் மக்கள் எமது வ பி.போ.ச. சேவையினைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் பெருந் தொகையினர் எமது யாழ். பேருந்து நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர்

எனவே ஐந்து இலட்சம் மக்களில் நாளாந்தம் பயணம் செய்யும் 26 ஆயிரம் பிரயாணிகளின் சௌகரியத்தைப் பார்ப்பதா? அல்லது ஒரு சில தனிப்பட்டவர்களின் நலனைப் பார்ப்பதா? சம்பந்தப்பட்டவர்களுக்கு இது சமர்ப்பணம். ★

**உதயவாக்கு**

மகத்தான காரியங்களைச் செய் நீண்டகாலம் அவற்றைப் பற்றிக் கனவு காணாதே.

சார்லஸ் கிங்ஸ்லி

## நாளை

ஐப்பசி 17

புதன்கிழமை

திதி: தசமி

முற்பகல் 7.36 வரை.

நட்சத்திரம்: பூரம்

பின்னிரவு 2.36 வரை

சுபநேரம்: 4.34—6.04

ராகுகாலம்: 12.04— 1.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே

அந்த விவரங்களில் — இலக்கங்களில் — சில தவறுகள் உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சரியான பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு மற்றும் அனுமதி வழங்கப்பட்ட திகதி ரீதியாக வருமாறு:-

**செப். -- 3 ஆம் திகதி வரை**

சாவகச்சேரி —
(105720பி), (108527பி), (108531பி), (108531சி), (108541பி),(108588பி), (114532டி), (114541சி), (114550ஏ), (114550சி), (114574ஏ), (115654ஏ), (094681ஏ).

யாழ்ப்பாணம் —
[113914டி],[115778பி], [114268ஏ], [115809ஏ],

கரவெட்டி —
[113392ஏ],[113472ஏ], [115317சி], [115341ஏ].

ஊர்காவற்றுறை —
[118'0ஏ].

பருத்தித்துறை —
[113308ஏ],[113443ஏ].

நல்லூர் —
[114831டி].

உடுவில் —
[117228பி],[117228சி], [117228டி], [117228ஈ],

வேலணை —
[11891ஏ], [11952ஏ].

**செப்ரெம்பர் 30 ஆம் திகதிவரை**

பருத்தித்துறை —
(118914ஏ),

சண்டிலிப்பாய்—
(113032ஏ), (119459)ஏ, (119215ஏ), (121432ஏ).

தெல்லிப்பழை —
(119424பி).

உடுவில் —
(116832ஏ), (119218ஏ).

கோப்பாய்—
(119532பி), (116504பி), (104460ஏ), (104460பி).

மருதங்கேணி —
(085090ஏ), (085091பி).

நல்லூர் —
(119249சி).

**ஒக்ரோபர் முதலாம் திகதிவரை**

சாவகச்சேரி —
(118617ஏ), (118632பி).

**ஒக்ரோபர் 3 ஆம் திகதிவரை**

சங்கானை —
(119404சி), (119428ஏ)

தெல்லிப்பழை —
(118379ஏ).

சாவகச்சேரி —
(119477ஏ).

கோப்பாய் —
(111202ஏ).

**ஒக்ரேபர் 8 ஆம் திகதி வரை**

நெடுந்தீவு —
[12134ஏ].

யாழ்ப்பாணம் —
[120357ஏ], [120398ஏ], [120498ஏ].

**ஒக்ரோபர் 12 ஆம் திகதி வரை**

சாவகச்சேரி —
[120980ஏ].

யாழ்ப்பாணம் —
[120585ஏ].

கரவெட்டி —
[115523ஏ]. [115539ஏ].

நல்லூர் —
[119649ஏ], [119393பி].

பருத்தித்துறை —
[120084ஏ].

கோப்பாய் —
[116582ஏ], [116585ஏ], [116589ஏ], [116589பி], [116589சி], [116592ஏ], [116592பி], [116593ஏ], [116593பி], [116600ஏ], [116600பி], [116695ஏ], [116735ஏ], [116735பி], [116756ஏ], [116756பி], [116762ஏ], [116762பி], [116904ஏ], [116905ஏ], [116910ஏ], [116911ஏ], [116912ஏ], [116923ஏ], [116905பி]

**ஒக்ரோபர் 14 ஆம் திகதி வரை**

பருத்தித்துறை —
[121961ஏ], [122088ஏ].

**ஒக்ரோபர் 20 ஆம் திகதி வரை**

யாழ்ப்பாணம்-(122712ஏ]
கரவெட்டி — (111521டி], [119067 ஏ), (070848 ஏ]'
ஊர்காவற்றுறை— (12139ஏ)
கோப்பாய் — (121222 ஏ),
மருதங்கேணி —(121888ஏ),
நல்லூர் —(123008 ஏ), [121848ஏ),
பருத்தித்துறை— (113597 ஏ), (113660 ஏ],
சண்டிலிப்பாய் —(121823ஏ)

**ஒக்ரோபர் 23 ஆம் திகதி வரை**

சாவகச்சேரி— [114487ஏ)

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் (ஒக்ரோபர் 27 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

[121731ஏ], [121731பி], [121799ஏ], [121800ஏ], [121854ஏ], [123551ஏ], [117182ஏ], [117182பி], [117182சி], [118388ஏ], [119432ஏ], [123459ஏ], [123527ஏ], [123527பி], ]123527சி], ]123569ஏ], [123569பி], [123569சி],

**சாவகச்சேரி**

(105659ஏ), (105659பி), (105709ஏ), (110603ஏ), (110603பி), (110603சி), (114377ஏ), (114377பி), (114384ஏ), (114435ஏ), (114521ஏ), (114521பி), (120920ஏ), (120920பி), (123312ஏ)

**யாழ்ப்பாணம்**

[112660ஏ], [112660பி], [112660சி], [122432ஏ], [122470ஏ], [122470பி], [122470சி], [122470டி], [122470ஈ], [122470எவ்], [122480ஏ], [122480பி], [122480சி], [122509ஏ], [122538ஏ], [122544ஏ], [122598ஏ], [122658ஏ], [122662ஏ], [122662பி], [122685ஏ], [122735ஏ], [122767ஏ], [122768ஏ], 122783ஏ], [122783பி], [122783சி], [122783டி], [122783ஈ], [122820ஏ], [122841ஏ], [122842ஏ], [122842பி], [122842சி], [122842டி], [122843ஏ], [122857ஏ], [122867ஏ], [122881ஏ], [122887ஏ], [122887பி], [124462ஏ], [124562ஏ], [124576ஏ].

**கோப்பாய்**

(110185ஏ), (116547ஏ), (116767ஏ), (116773ஏ), (116921ஏ), (116921பி), (116937ஏ), (116937பி), (121091ஏ), (121141ஏ), (121141பி), [121141சி[, [121141டி], [121141ஈ], [121146ஏ], [121168ஏ], [121176ஏ], [121176பி], [121176சி], [121186ஏ], [121186பி], [121384ஏ], [123135ஏ], [123135பி] [123141ஏ], (123141பி) (123145ஏ), [123145பி], [123145சி], [123219ஏ], [123219பி[, [123988ஏ], [123988பி], [123988சி].

**நல்லூர்**

[117522 ஏ], [117536ஏ], [117548 ஏ[, [117577 ஏ], [177662 ஏ[, [123058 ஏ], [123231 ஏ[, [120753 ஏ], [122752 ஏ], [124529 ஏ], 121696 ஏ], ]121728 ஏ[, [123560 ஏ], [123431 ஏ], [123580 ஏ], [111982 ஏ], [111982பி[, [111982 சி], [117256 ஏ[, [117256 பி], [119437ஏ], [119437பி[, [119437 சி], [119467 ஏ], [123445 ஏ ], [123445பி], (123468 ஏ), (123487ஏ), (123536 ஏ).

**பருத்தித்துறை**

[109999ஏ]

**சண்டிலிப்பாய்**

[121699ஏ], [123342ஏ], [123515ஏ[, [123557ஏ], ]117316ஏ[, [118383ஏ], [118383பி], [119367ஏ], [119369ஏ], ]123407ஏ], [123407பி], [123407சி], [123407டி], [123452ஏ[, [123452பி[, [123492ஏ], [123492பி], [123492சி], [123505ஏ], [123523ஏ], [123523பி], [123571ஏ].

**தெல்லிப்பழை**

(121243ஏ), (121632ஏ) (121754ஏ), (123345ஏ),

**உடுவில்**

(121233ஏ), (121233பி), (121239ஏ), (121246ஏ), (121247ஏ), (121247பி), (123118ஏ), (121519ஏ), (121685ஏ), (121685பி), (121686ஏ) (121743ஏ), (121743பி), (121837ஏ), (123565ஏ), (123565பி), (123565சி), 123609ஏ), (121690ஏ), (121741ஏ), (123357ஏ), (123399ஏ), (123467ஏ), (125419ஏ)

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின்) ஒக்ரோபர் 29 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:—

**சங்கானை**

(115053 ஏ), (115053 பி), (115053 சி), (123450 ஏ), (123472 ஏ), (123590 ஏ),

**யாழ்ப்பாணம்**

(116340 ஏ),(118008 ஏ), (118008 பி), (118139 ஏ[, (18133ஏ), (120422 ஏ), [120734 ஏ[, (120642 ஏ), ]120766 ஏ[, [122466 ஏ], [122532 ஏ], [122589 ஏ), [122631 ஏ), ]122640 ஏ[, [122640 பி], [122640சி], (122640டி], (12269ஏ), [12269பி), (12269சி], (12269டி), (122734ஏ], [122742ஏ], [122742பி], [122742சி], (122754ஏ), (122847ஏ), [122847பி), (122847சி], (122847டி), (122847ஈ), (122859ஏ), (122892ஏ), (124466ஏ), (124466பி), (124483ஏ), (124491ஏ), (124500ஏ), (124500பி), (124520ஏ), (124527ஏ), (124552ஏ), (124591ஏ), (124607ஏ), (124671ஏ), [122892பி],

**நல்லூர்**

(122874ஏ), (122874பி),

**சண்டிலிப்பாய்**

(123379ஏ), (123379பி),

**தெல்லிப்பழை**

123383ஏ).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [ஒக்ரோபர் 30 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(121816ஏ), (121816பி),

**சாவகச்சேரி**

(118582ஏ), (118582பி), [118582சி), (120879ஏ), (120879பி), (120952ஏ), (120952பி), (120985ஏ), (122649ஏ), (123252ஏ), [123268ஏ), (123281ஏ), (123281பி), (123281சி), (123284பி), (123646ஏ), (123646பி), (123646சி), (123648ஏ), (123648பி), [123284ஏ],

**யாழ்ப்பாணம்**

(104792ஏ), (104792பி), (104792சி), (109547ஏ), (112282ஏ), (112282பி), (112282சி), (112282டி), (112282ஈ), (117931ஏ), (118079ஏ), (118213ஏ), (120286ஏ), (120317ஏ), (120388ஏ), (120608ஏ), (120730ஏ), (120730பி), (120730சி), (120730டி), [120730ஈ], [120733ஏ[, [120733பி], [120733சி], [120748ஏ], [122397ஏ], [122417ஏ], [122417பி], [122417சி], [122454ஏ], [122454பி[, [122487ஏ], [1224 2ஏ], [122503ஏ], [122510ஏ], [122524ஏ], [122541ஏ[, [122541பி], [122574ஏ], [122600ஏ]' [122643ஏ], [122643பி]' [122643சி], [122668ஏ]. [122682ஏ], ]122682பி] [122692ஏ]. [122692பி] [122694ஏ], [122694பி], [122708ஏ], [122718ஏ], [122723ஏ], [122736ஏ], [122760ஏ], [122762ஏ], [122813ஏ], [122831ஏ], [122833ஏ], (122833பி), (122840ஏ), (122848ஏ), (122855ஏ), (122875ஏ), (122875பி), (124501ஏ), (124512ஏ), (124656ஏ), (124657ஏ),

(தொடரும்)

## தீவுப்பகுதிக்கான...

[ஏழாம் பக்கத் தொடர்]
பகுதிக்கு த் தாம் கொண்டு செல்லும் அனைத்துப் பொருள்களையும் (மரக்கறி வகைகள் உட்பட) அல்லைப்பிட்டிச் சந்தியில் கடற்படையினரின் தீவிர சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

இதேபோலவே தீவுப்பகுதியில் இருந்து மீன், கருவாடு முதலியவற்றை யாழ்ப்பாணம் கொண்டு வருபவர்களும் அல்லைப்பிட்டியில் அவற்றை வீதியில் பரவி சோதனைக்குட்படுத்திய பின்னரே யாழ். கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது.

இதேவேளை பண்ணைப் பாலத்தில் உள்ள படையினர் பண்ணைப் பாலத்தின் மேலால் பஸ்கள் எதுவும் பயணிகளுடன் செல்லக் கூடாது என தற்போது இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர். அனைத்துப் பயணிகளும் இறக்கிவிடப்பட்ட பின்னரே பஸ்கள் பண்ணைப்பாலத்தைக் கடக்க அனுமதிக்கப்படுகின்றன.

ஆனால் சுமார் 75 படையினரை ஏற்றிக் கொண்டு பஸ்களும், ஆயிரம் லீற்றர் தண்ணீரை ஏற்றிக் கொண்டு படையினரின் பவுஸர்களும் பாலத்தின் மேலால் செல்ல அனுமதிக்கப்படுவது பொது மக்கள் மத்தியில் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.


## தேவை

- நிர்வாக உத்தியோகத்தர் (A. O)
- பயிற்றப்பட்ட தாதிகள்/ பயிற்சி பெற விரும்பும் தாதிகள்
- காவலாளிகள்
- சுத்திகரிப்புத் தொழிலாளி

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி: **07-11-99**

நேர்முகப் பரீட்சை (தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)
**10 - 11 - 99 காலை 8. 30 மணிக்கு**

நிர்வாகச் செயலாளர்

**"யாழ். வைத்தியசாலை"**
284, பலாலி வீதி.
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T. P/ Fax – 3188

[சி/0622]


## மதுபான நிலையத்தில் திருட்டு

நெல்லியடி, நவ. 2

ஊரடங்கு அமுலிலிருந்த நேரம் மதுபான விற்பனை நிலையம் ஒன்றின் கூரையைப் பிரித்து உள் புகுந்த திருடர்கள் அங்கு இருந்த மதுபான வகைகளைக் குடித்து விட்டு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சாராயவகைகளைத் திருடிக் கொண்டு தலைமறைவானார்கள்.

இந்த துணிகரத் திருட்டு நெல்லியடியிலுள்ள சாமியன் அரசடிச் சந்தியிலுள்ள ஒரு மதுபான நிலையத்தில் இடம் பெற்றது

இந்த திருட்டுக் குறித்து கடை உரிமையாளர் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். [இ-109)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
க. பொ. த. (உ. த) 2000 கலைப்பிரிவு மாணவன்

**தெட்சணாமூர்த்தி வைகுந்தன்**
[அனலை தீவு]

தோற்றம்: 01 - 06 - 1981
மறைவு: 29 - 10 - 1999

அன்னார் கொழும்பில் விபத்தினால் அகால மரணம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ். இந்து கலைப்பிரிவு 2000

[70593]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## 'மிட்சுஇ - ஜெஸிபா' கிண்ணம்:

# வவுனியா, திருமலை அணிகள் இன்று மத்திய கல்லூரியில் மோதுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 2

மிட்சுஇ — ஜெஸிபா வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்ட அணிகள் பங்குபற்றும் — வடக்கு, கிழக்கு மாகாண - கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இரண்டாவது ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 50 ஓவர்கள் கொண்ட இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வவுனியா மாவட்ட அணி திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து விளையாடும்.

இன்று விளையாடும் திருகோணமலை அணி வீரர்களின் விவரம் வருமாறு:-

ஆர். பார்த்திபன் [அணித் தலைவர்], எஸ். மதிவதனன் [உதவி அணித் தலைவர்], வி இளவழகன், எஸ். ஸி மத்தியூஸ், கே. றொஷான், எஸ் உமாசங்கர், ரி. சத்தியா, ஜி. கே. டபிள்யூ கிருஷாந்த், கே. சுதாகரன், ஏ சிவநாதன், என். கிருஷ்ணதேவா, ஆர். சாருஷன்.

அணி முகாமையாளர்:- என். ஸ்ரீ மனோகரன்.

பயிற்றுநர்:- எல். ஆர் எம். மங்கள தர்மசேன.

வவுனியா மாவட்ட அணி விவரம் வருமாறு:-

ஆர். றொபின்ஸன் றோய் [அணித் தலைவர்], எஸ். ஞானகுமரன் [உதவி அணித் தலைவர்], பி. ராஜ்குமார், எஸ் இளங்குமரன், வை. ஜோகரஞ்சித், ஐ. ரமணன், கே. முகுந்தன், ஆர். நெவில் பிரியந்த, என். பி. விஜயசிங்க, எல். டன்ஸ்டன். எஸ். கௌஷீகன். எஸ். சந்திரசேகர.

அணி முகாமையாளர்:- என். பி சுந்தராங்கன்.

பயிற்றுநர்:- டி. எல். ஜயசேகர.

இன்றைய ஆட்டத்துக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கலந்து கொள்வார்.

இன்று வருகை தரும் மட்டக்களப்பு மாவட்ட அணி நாளை திருமலை மாவட்ட அணியுடன் மோதும் நாளை நடைபெறவுள்ள இன்னோர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து விளையாடும். (உ-8)

# இந்திய - நியூஸிலாந்து இறுதிநாள் ஆட்டம் இன்று

அஹமதாபாத், நவ. 2

இந்திய-நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே அஹமதாபாத்தில் நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பு இன்றி 21 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றைய ஆட்டம் ஆரம்பிக்கையில் தனது முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றிருந்த நியூஸிலாந்து அணி 308 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அணிக்காக நதான் அஸ்டில் 74 ஓட்டங்களையும் கிறிஸ் கெய்யின்ஸ் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் அனில் கும்ப்ளே 5 விக்கெட்டுக்களையும் வெங்கடேஷ் பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றதுடன் இன்னிங்ஸை முடித்துக்கொண்டது. சௌரவ் கங்குலி 53 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த டெஸ்ட்டின் இறுதி நாளான இன்று நியூஸிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு தனது இரண்டாவது இன்னிங்ஸில் இன்னும் 403 ஓட்டங்களைப்பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கின்றது அந்த அணியின்வசம் பத்துவிக்கெட்டுகள் உள்ளன. [உ-4]

# கிரிக்கெட் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தெரிவுக்குழுவின் கூட்டம் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் றஜீவன் அறிவித்துள்ளார். (உ-8)

# சிறந்த வீராங்கனையாக யாழ். மாணவி

கொழும்பு, நவ. 2

கொழும்பு சுகததாஸ சதுக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெற்றுவந்த 18 முதல் 22வயதுக்கிடைப்பட்ட யுவதிகளுக்கான தேசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிறந்த களவீராங்கனையாக யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த எஸ் அஜந்தா தெரிவு செய்யப்பட்டார்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான இவர் அரியாலை ஐக்கிய கழகம் சார்பில் மாவட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார். (ஐ-4)

# பரிசளிப்பும் பாராட்டும்

யாழ்ப்பாணம், நவ. 2

நல்லூர் ஞானோதய வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் மேற்படி வித்தியாலய முன்னாள் அதிபர் த. திருநாவுக்கரசுவின் சேவை நலன் பாராட்டுவிழாவும் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் சு. இராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் நல்லூர்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சத்தியலெட்சுமி காங்கேயன் பிரதம விருந்தினராகவும், யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். ஸ்ரீதயாளன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஐ-7)

# இடர்காலக் கொடுப்பனவு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், நவ. 2

பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களுக்கு இதுவரையும் இடர்காலக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இடர்காலக் கொடுப்பனவு வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும்—

பனை அபிவிருத்திச் சபையில் 250 ஊழியர்கள் வரை கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கான சம்பள மீளாய்வும் இதுவரை செய்யப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஐ-5)

# யாழ். பிரதம தபாலகத்தில் தந்திச் சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ் பிரதம தபாலகத்தில் நேற்று முதல் மீண்டும் தந்திச் சேவை வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகத் தடைப்பட்டிருந்த இந்தத் தந்திச் சேவை நேற்று மாலை 3 மணிக்கு யாழ். பிரதம தபாலக தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் தலைமையில் ஓய்வுபெற்ற தபாலதிபர் கே. தம்பிஐயா. ஆசிரியர் ஆ. கோபாலமூர்த்தி ஆகியோரினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது

இந்த வைபவத்தில் தபால் தந்தி மற்றும் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சரின் செயலாளர் ஆ. சிவபுரத்தரசன, வட பகுதி பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். சிவஞானசுந்தரம், தபால் அத்தியட்சகர் எஸ். தர்மராஜா, ரெலிக்கொம் வடபிரதேச முகாமையாளர் அன்ரனிராசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-5)

## பெரியமடுப்...

[முதலாம் பக்கத் தொடர்]

சேதங்களை ஏற்படுத்தி இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளிடம் இருந்து8ரீ-86 ரகத் துப்பாக்கிகளை படையினர் கைப்பற்றியுள்ளதாக படை வட்டாரங்களை ஆதாரம்காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. எனினும் பெரியமடுப் பகுதியில் இடம்பெறும் மோதல்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து எந்தத் தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையின்படி வன்னிப்பகுதியில் கடந்த இரு தினங்கள் இடம்பெற்ற மோதல்களில் 28 படையினர் பலியானதாகவும் 87 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது படையினரின் தாக்குதலில் புலிகள் தரப்பில் 32 பேர் பலியானதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கண்டி வீதிக்குக் கிழக்கே கடந்த சில தினங்களாக கடும் மோதல்கள் இடம்பெற்று வந்த அம்பகாமம் பகுதியில் நேற்று பெரியளவில் சண்டை இடம்பெறவில்லை என்றும்—

எனினும் படையினர் அங்கிருந்து ஒட்டுசுட்டான் பகுதி மீது பலத்த ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும் —

வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கண்டி வீதிக்கு மேற்கே பெரியமடுப் பகுதியில் இருந்து படையினர் முன்னேற முயற்சியை ஆரம்பித்திருப்பது அம்பகாமம் பகுதியில் இருந்து புலிகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக இருக்கலாம் என்று பாதுகாப்பு விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

(ஐ-7-4)

## அம்பகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ மேஜர் தனா [சுப்பிரமணியம் யோகேஸ்வரி - வவுனியா.]

★ 2ஆம் லெப்டினன்ட் அணியரசி [பெரியசாமி லோகேஸ்வரி - விசுவமடு].

★ தமிழ்க்கலை [சின்னத்துரை உஷாநந்தினி - பூநகரி]

★ 2 ஆம் லெப்டினன்ட் அருந்தா [நாகராசா ஜெயராணி - யாழ்ப்பாணம்]

★ சசிகலா [யேசுதாசன் நெருண்ஜிஜீ- யாழ்ப்பாணம்)

★ மேஜர் சந்திரா [ஆறுமுகம் அல்லி .- கிளிநொச்சி]

★ மேஜர் இளம்பிறை [நாகேந்திரன் ஜெயகலா - யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப்டினன்ட் அகத்தமிழ் [அரியதாஸ் சந்திரகலா — அக்கராயன்]

★ வில்லவன் [வன்னியசிங்கம் பிரவீணா-யாழ்ப்பாணம்]

★ கப்டன் நிலாமதி [முருகையா இராமலக்ஷ்மி - வவுனியா]

★ கனிமொழி [கணேஸ் ஹேமலதா - மட்டக்களப்பு]

★ அருள்மொழி [ஜீவரட்ணம் சாந்தா — அக்கராயன்]

★ இசுக்குட்டி [உதயகுமார் உஷாநந்தினி- யாழ்ப்பாணம்]

★ லெப்டினன்ட் இசைமேவி [துரைரட்ணம் மதுரா - யாழ்ப்பாணம்]

★ 2 ஆம் லெப்டினன்ட் நகைமலர் [வடிவேல் சிவாஜினி — மாங்குளம்]

★ கப்டன் இளவரசி [சிவப்பிரகாசம் அற்புதராணி — மணலாறு]

★ லெப்டினன்ட் திலீபனா [சதாசிவம் சுதானந்தி - முல்லைத்தீவு]

★ லெப்டினன்ட் தர்மவதி [சீனிவாசகம் றகிமலா - யாழ்ப்பாணம்]

★ தர்மினி [மனோகரன் மஞ்சுளா - கிளிநொச்சி]

★ கப்டன் அருந்தா [சிவஞானம் ராஜேஸ் - நெடுங்கேணி] (ஐ-க-ம)

# ஐ ஐந்து ஆண்டுகள்

உதயன் 31-10-1999 இதழில் 9 ஆம் பக்கத்தில் வெளியான முன்னாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையை வாழ்த்திப் பிரசுரமான வாழ்த்துப்பா விளம்பரத்தில்—

மூன்றாவது பந்தியை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

ஆன்மீகத் தலைவராய் (ஆயர்) ஐ ஐந்து ஆண்டுகள்
அயராது ஆட்சி புரிந்து ஆகமம் தன்னை ஆய்வுடன்
தந்தவரே: வாழ்க! வாழ்கவே!!

ஐந்து ஆண்டுகள் — என்று முன்னர் பிரசுரமாகியது தவறாகும்.


# "முயற்சி"

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திறன்விருத்தி மையம்.

## இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் 1998/99 பயிற்சிப் பிரிவு

எமது நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகளுக்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. மாணவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள பயிற்சிநெறிகள்:

- தட்டச்சு சுருக்கெழுத்து (தமிழ்)
- தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்)
- நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தல்
- வயறிங், றீவைண்டிங்
- தையல் இயந்திரம் திருத்தல்
- தட்டச்சு இயந்திரம் திருத்தல்
- உடையமைத்தல்

— செயலாளர்
— TRRO

[ஏ/9632]



# கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியில் கடமையாற்றும்
ஆனந்தவடிவேல் மகிதரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

## திரு. சின்னத்துரை ஆனந்தவடிவேல்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாரின் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும்
சக ஊழியர்களும்
தேசிய சேமிப்பு வங்கி,
சுன்னாகம்.

[70610]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈ. பி. டி. பியின்...**

(முதலாம் பக்கத் தொடர்)

விடுத்துள்ளது.

காணாமற்போன தமது பிள்ளைகளில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பது பற்றிக் கதைக்காமல் நிவாரணம் பற்றிப் பேசிய தமிழ்ப் பிரதிநிதிகளின் கூற்றை சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற சமயம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரேனும் அங்கு பிரசன்னமாகாதது குறித்தும் பாதுகாவலர் சங்கம் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது

இதேவேளை —

காணாமற்போனோர் தொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் —

தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற விவரத்தை அத்திகதிக்கு முன்னர் அரசு வெளியிடாவிட்டால் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பது என்றும் —

கைதாகிக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் முடிவு செய்துள்ளது.

இது விடயமாக எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் கூடி கலந்துரையாடுவது என்றும் சங்கம் தீர்மானித்துள்ளது.

## சமூக மயமாக்கல் களம்

யாழ்ப்பாணம், நவ. 2

தேசிய இளைஞர் சேவை மன்றம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து சமூகமயமாக்கல் களம் ஒன்றினை நடத்தவுள்ளது.

இதற்கென மன்றத்தின் தலைமைச் செயலகத்தினால் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் த. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

இம்மாதம் முதல் இத் திட்டம் அமுலுக்குவரும் என்றும் அவர் கூறினார். (ஐ-5)

## பயிலுநர் ஆசிரியருக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 2

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 71 பயிலுநர் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடம் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் கடமையில் அமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும். 4 வருடங்களின் பின்பே நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

இதேவேளை வடக்கு—கிழக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 650 தமிழ்மொழிமூல ஆசிரியர்களை உடனடியாக நியமிப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரமளித்துள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் யாவும் கல்விச் சேவை ஆணைக்குழுவால் விரைவில் கோரப்படவுள்ளன.

(இ-10)


# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி குலமணி பொன்னுத்துரை**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

மண்ணுலகம்: 29-06-1934

விண்ணுலகம்: 03-10-1999

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது பாசமிகு தாயாரின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தோருக்கும் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும் இறுதி யாத்திரையில் பங்குகொண்டோர் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று (02-11-99) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கணவர், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

டச்சு வீதி,
சண்டிலிப்பாய்.

(சி/9628)



**மீள் பரீட்சை**

எமது நிறுவனத்தில்
**Diploma in MS Office**

மீள் பரீட்சைக்காகப் பதிவு செய்தவர்களின் பரீட்சைகள் யாவும் இம் மாதம் 5 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகும். நேர அட்டவணையை அலுவலகத்தில் பார்வையிடவும்.

- இயக்குநர்
**I. I. S.**

[சி/9630]



**விற்பனைக்கு வந்துவிட்டது!**

- புத்தம் புதிய
- பழைய
- பக்திப் பாடல்கள்

அடங்கிய Audio CD களின்

விலை: 375/- முதல் 450/– வரை

**அருண் வீடியோ மூவி**
பிரதான வீதி, நெல்லியடி.

[70595]


## உப்பு வல்லையில் பாலம் சேதம் போக்குவரத்து பாதை மாற்றம்

நெல்லியடி, நவ. 2

யாழ். பருத்தித்துறை வீதியில் உப்பு வல்லை என்ற இடத்தில் பாலம் சேதமடைந்திருப்பதனால் அப்பகுதி ஊடான போக்குவரத்தில் நேற்று முன்தினம் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வாகனங்கள், உப்பு வல்லைச் சந்தியிலிருந்து தொண்டமானாறு நாற்சந்திக்கு சென்று அங்கிருந்து வல்லைச் சந்தி ஊடாக பயணத்தை தொடருகின்றன.

இதேவேளை, வடமராட்சியில் முக்கிய பாலமாக விளங்கும் வல்லைப் பாலம் இருபுறமும் அணைக்கட்டுகள் உடைந்து சேதம் அடைந்திருக்கின்றது. இதனால் இப்பகுதியால் வாகனங்களில் செல்வோர் பெரும்அச்சமடைகின்றனர்.

இப்பகுதியில் இராணுவத்தினரின் வாகனம் ஒன்று தடம்புரண்டு, வல்லைக் கடலில் வீழ்ந்ததில் மூன்று படையினர் பலியானதும் தெரிந்ததே. (இ-109)

**கைதிகள்...**

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை இப்போராட்டத்தைத் தொடரப் போவதாக அவர்கள் நால்வரும் தெரிவித்துள்ளனர். (ஐ-5)

## சந்திரிகாவுக்கு ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதாக மக்கள் விடுதலை ஒருமைப்பாட்டு முன்னணி நேற்று அறிவித்தது. (ஐ-7)


**தீபாவளி திருநாளைஒட்டி அதி விசேஷ கழிவு விற்பனை**

- பட்டு, பருத்திப்புடைவைகளும்
- ஆண், பெண் இருபாலாருக்குமான றெடிமேட் ஆடைகளும்
- கண்கவர் சாறிகளும்

மொத்த விலையில்

வாடிக்கையாளருக்கு.........

★ அனைத்தும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை

**சீமாட்டி**
(புடைவைக் கடல்)
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9588)



**காவேரியில்...**

**தீபாவளியை முன்னிட்டு இன்றும் மாபெரும் மலிவு விற்பனை**

நீங்கள் விருப்புடன் தெரிவு செய்திடும்

▶ சாறிகள் ▶ ஸ்கேட் அன் பிளவ்ஸ்
▶ பஞ்சாபி ▶ சேட் ▶ சூட்டிங்
▶ T சேட் ▶ பல் வகைத் துணி வகைகள்

அனைத்திற்கும் மின்னல் வேக விலை குறைப்பு

**காவேரி சில்க்ஸ்**

48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.



**நவீன சந்தை உள்ளே...**

**ரம்மியாஸில் "தீபாவளி"க் கால விற்பனை**

உங்கள் தெரிவுக்கென

◆ சேட் ◆ T சேட் ◆ றெடிமேட் ரவுசர்
◆ சூட்டிங் ◆ பெனியன், சாரங்கள்
◆ பல்வகை சாறி வகைகள் ◆ ஸ்கேட் அன் பிளவ்ஸ்
◆ பஞ்சாபி ▶ இன்னும் பற்பல...

**ரம்மியாஸ் சில்க்ஸ்** (சி/9498)

181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) [illegible] யாழ்ப்பாணம் [illegible] 861 ஆம் இலக்கத்திலுள்ள அச்சக பணிமனையில் 02 11 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org